# 8

# களிம்பேறிய பொன்!

## (4:1-12)

*சாகசம் செய்யும் விமானி ஒருவர் ஒரு ஜெட் விமானத்தை ஓட்டிய வராக, பார்வையாளர்களின் கூட்டத்தின் தலைக்கு மேல் தாழ்வாக, தலைகீழாகப் பறந்தார். இதை அவர் இதற்கு முன்பு நூற்றுக்கு மேற்பட்ட முறைகள் செய்திருந்தார், அவர் விமானத்தைப் பழையபடி நேராகத் திருப்பி, ஏறக்குறையக் காட்சியிலிருந்து மறையும் வரை தரையில் இருந்து பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைத்திருக்கின்றார். இருப்பினும் இந்த முறை, அவர் அதைத் தவறான வழியில் செய்து, தனது விமானத்தைப் பார்வையாளர்களின் கூட்டத்தில் மோதச் செய்தார். தலைகீழாகப் பறப் பவர்களுக்கு மேல்புறமானது கீழ்புறமாகவும், கீழ்புறமானது மேல் புறமாகவும் உள்ளது. அவர் திசை பற்றிய தமது உணர்வை இழந்து போகும் படிக்குத் தலைசுற்றல் என்ற நிலையை அடைந்திருக்கக்கூடும். அதிகமான வேகங்களில் செல்லும்போது புவியீர்ப்பு விசை இருப்பதில்லையாகையால், தலைகீழாகப் பறப்பவர் சரியான வகையில் பறப்பவரைப்போலவே உணரு கின்றார். ஒரு விமானி, தாழ்வான உயரத்தில் ஒரு வினாடியில் ஆயிரத்தில் ஒரு பகுதி நேரமாவது, திசை பற்றிய தனது உணர்வை இழந்தார் என்றால், அவர் ஒரு தவறைத் திருத்துவதற்குப் போதிய பதில் நேரத்தைக் கொண்டிருக்கமாட்டார்.*

*அதுபோன்ற சில விஷயங்கள் சிலவேளைகளில், யூதாவின் ஆட்சி யாளர்கள், ஆசாரியர்கள் மற்றும் பிரபுக்கள் ஆகியோருக்கு நடைபெற்றது. அவர்கள் ஒழுக்கரீதியாகத் தலைசுற்றல் கொண்டிருந்தனர். ஆவிக்குரிய நிலைப்பாட்டில், அவர்கள் "எந்த முனை மேலிருக்க வேண்டும்" என்பதை அறியாது இருந்தனர்.*

> *ஐயோ! பொன் மங்கி, பசும்பொன்மாறி, பரிசுத்த ஸ்தலத்தின் கற்கள் சகல வீதிகளின் முனையிலும் கொட்டுண்டுபோயிற்றே. ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப் படுகிறார்களே. திமிங்கிலங்கள் முதலாய்க் கொங்கைகளை நீட்டி, தங்கள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும், என் ஜனமாகிய குமாரத்தியோ வனாந்தரத்திலுள்ள தீக்குருவியைப்போல் குரூரமாயி ருக்கிறாளே. குழந்தைகளின் நாவு தாகத்தால் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது, பிள்ளைகள் அப்பங்கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுப்பாரில்லை. ருசியான பதார்த்தங்களைச் சாப்பிட்டவர்கள் வீதிகளில் பாழாய்க்கிடக்கிறார்கள், இரத்தாம்பரம்*

*உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக் கொள்ளு கிறார்கள். கைச்செய்கை இல்லாமல் ஒரு நிமிஷத்திலே கவிழ்க்கப் பட்ட சோதோமின் பாவத்துக்கு வந்த தண்டனையைப் பார்க்கிலும் என் ஜனமாகிய குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வந்த தண்டனை பெரிதாயிருக்கிறது. அவளுடைய நசரேயர் உறைந்த மழையைப் பார்க்கிலும் சுத்தமும், பாலைப்பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப்பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப்பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள். இப்பொழுதோ, அவர்களுடைய முகம் கரியிலும் கறுத்துப்போயிற்று, வீதிகளிலே அறியப்படார்கள், அவர்கள் தோல் அவர்கள் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு, காய்ந்த மரத்துக்கு ஒப்பாயிற்று. பசியினால் கொலையுண்டவர்களைப்பார்க்கிலும் பட்டயத்தால் கொலையுண்டவர்கள் பாக்கியவான்களாயிருக்கி றார்கள், அவர்கள் வயலின் வரத்தில்லாமையால் குத்துண்டு, கரைந்து போகிறார்கள். இரக்கமுள்ள ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளை களைச் சமைத்தன, என் ஜனமாகிய குமாரத்தியின் அழிவில் அவைகள் அவர்களுக்கு ஆகாரமாயின. கர்த்தர் தமது கோபத்தை நிறைவேற்றி, தமது உக்கிரகோபத்தை ஊற்றி, சீயோனில் அக்கினியைக் கொளுத்தினார், அது அதின் அஸ்திபாரங்களைப் பட்சித்துப் போட்டது. சத்துருவும் பகைஞனும் எருசலேமின் வாசல்களுக்குள் பிரவேசிப்பான் என்கிறதைப் பூமியின் ராஜாக்களும் பூச்சக்கரத்தின் சகல குடிகளும் நம்பமாட்டாதிருந்தார்கள் (4:1-12).*

*இஸ்ரவேலின் ஆதிநாட்களில் பண்பானது பொன்னைப் போல் இருந்தது. பண்பின் மனிதர்கள் நாட்டின் ஆபரணங்களாக இருந்தனர். தெய்வ பண்பு இனியும் முக்கியமில்லை என்றானபோது, யூதாவும் எருசலேமும் கீழ்நோக்கிச் செல்லும் நீர்ச்சுழல் போலாயினர். அந்த மக்கள் தாங்கள் உலகத்தில் மேல்நோக்கிச் செல்வதாக நினைத்தனர். அவர்கள், வலது இடதாகவும், இடது வலதாகவும் தெரிகிறதான பின்புறம் உள்ளவற்றைக் காணும் கண்ணாடியில் காண்பது போல் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருந்ததால் குழப்பம் அடைந்தனர். நன்மையானது தீமை யானதைப் போலவும், தீமையானது நன்மையானதைப் போலவும் காணப் பட்டது. தெய்வ பண்பு அவர்கள் விரும்பிய பொக்கிஷங்களை அவர்களுக்கு அளிக்கக் கூடாததாக இருந்தது. கர்வமும், முன்னிருக்கும் தன்மையும், அதிகாரமும் அவர்களின் ஆபரணங்களாயின. அவர்கள் பொருட்செல்வத்தைப் பொறுத்து மதிப்பை அளந்தனர். யூதாவின் சமூகத்திலிருந்த பொன்னான பையன்கள் திசை பற்றிய தங்கள் கருத்துணர்வை இழந்தனர்.*

*ஒரு நாடானது தனது ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய திசையை இழக்கின்றபோது என்ன நடக்கிறது?*

## *பொக்கிஷம் குப்பையாகிறது (4:1, 2)*

*யூதாவின் பொன் எவ்வாறு களிம்பேறிற்று என்பதைக் கவனியுங்கள் (வச. 1). சூழ்நிலையானது நம்ப இயலாததாக இருந்தது, ஏனெனில் பொன்னானது களிம்பேறுவதில்லை! அவர்களின் பொன் உண்மை*

*யானதாக இருந்ததில்லை. அவர்கள் ஒரு தவறான மதிப்பீட்டு உணர்வைக் கொண்டிருந்தனர். மதிப்பு மிகுந்த பொன்னைப் போல் காணப்பட்டது உண்மையில் அவ்வாறு இருந்ததில்லை.*

*சாத்தான் ஒரு "ஏமாற்றுபவனாக," ஒரு வஞ்சனையாளனாக இருக்கின்றான்! அவன் மதிப்பற்ற பொருட்களை இந்த உலகத்திற்கு ஏராளமான விலைக்கு விற்கின்றான். ஒரு அற்பமான சந்தையில் பின்வருமாறு ஒரு விளம்பரப் பலகை வைக்கப்பட்டிருந்தது: "ஒருவரின் குப்பை இன்னொருவரின் பொக்கிஷம்." அதுவே சாத்தானின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு வழியில், அவன் தனது குப்பையானது விலைமதிப்பற்ற பொக்கிஷம் என்று இந்த உலகம் நம்பி ஏற்றுக் கொள்ளும்படி செய்யக் கூடியவனாக இருக்கின்றான்.*

*யூதாவின் ஆபரணங்கள் தெருவில் கொட்டப்பட்டு அவைகள் ஒன்றுமற்றவை என்பதுபோல் கால்களின் கீழ் மிதிக்கப்பட்டன. பெருந் துன்பமானது ஒருவரின் மதிப்பீட்டு உணர்வை மாற்றுகிறது. ஆபரணங்கள் ஒன்றுமற்றவையாகின; அவைகள் பொறுக்கியெடுத்துக் கொள்ளப்படத் தகுதியற்றவையாக இருந்தன, ஏனெனில் அவைகளால் வயிற்றை நிரப்ப முடியவில்லை. ஒரு காலத்தில் பொக்கிஷமாயிருந்தவை ஒன்றுமற்றவையாகின. மதிப்பற்ற குப்பையாக பின்கதவுகளுக்கு வெளியே எறிந்து விடப்பட்டவைகள் திடீரென்று மதிப்புமிக்கவைகள் ஆயின.*

*ஒருகாலத்தில் மதிப்பு மிக்கவர்களாய் இருந்த சீயோனின் குமாரர்கள், உண்மையான பொன்னுக்கு எதிரே எடையிடப்பட்டபோது, குயவனின் கைகளால் உண்டாக்கப்பட்ட மண்பாண்டங்களை விட அதிக மதிப்புடையவர்கள் ஆகவில்லை (வச. 2)! அவர்கள் போலியானவர்களாக, தாங்கள் மேன்மையானவர்கள் என்று பொதுமக்கள் நம்பச் செய்திருந்த தரம் தாழ்ந்த மனிதர்களாய் இருந்தனர். அவர்கள் நேர்மையாக வாழ விரும்பியிராத, போலி உருவகங்களைக் கட்டியெழுப்புபவர்களாக இருந்தனர், அவர்கள் நேர்மையாக வாழ்ந்து கொண்டிருந்ததாக மக்கள் நினைக்கும்படி விரும்புபவர்களாய் இருந்தனர். அவர்களைப் பொறுத்தமட்டில், கற்பனை உணர்வு என்பது உண்மை நிலையை விட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆயினும், காலமும் சூழ்நிலையும் அவர்களின் உண்மை இயல்பை வெளிப்படுத்தியது. அவர்கள் பொன்னே அல்ல. உண்மையான பொன் களிம்பேறுவதில்லை. அவர்கள் பொன் போலக் காணப்படும் குப்பையாக இருந்தனர்.*

## *பரிவிரக்கம் உயிர்பிழைக்க வழிவிட்டது (4:3, 4, 10)*

*யூதா நாடு முழுவதிலும், பிள்ளைகளுக்கான பரிவிரக்கம், தனிப்பட்ட உயிர்பிழைத்தலுக்கு வழிவிட்டது. ஓநாய்கள் தங்களின் குட்டிகளின்மீது கொண்டிருக்கும் பரிவிரக்கத்தைக் காட்டிலும் குறைவான பரிவிரக்கத்தையே தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் மீது கொண்டிருந்தனர் (வச. 3). ஓநாய் என்பது நாட்டின் வீணான மற்றும் குப்பையான பொருட்களை*

*உண்டு உயிர்வாழ்ந்த நாயைப் போன்ற ஒரு விலங்காக இருந்தது. அசுத்தமான, தோட்டியைப் போன்ற அந்த விலங்கு தகுதியற்றதாக, யூதா சமூகத்தினரால் விலக்கி வைக்கப்பட்டிருந்தது - ஆயினும் சிறைப்பிடிக்கப் பட்டபோது, அந்த ஓநாய்கள் கூட எருசலேம் குமாரத்திகளைக் காட்டிலும் அதிகமான பரிவிரக்கமுள்ள அக்கறை செலுத்துபவைகளாக இருந்தன. உணவு இல்லாததாலா அல்லது தங்களின் கவனமானது சுயபாதுகாப்பின் பக்கமாய்த் திரும்பியதாலா, எந்தக் காரணத்தினால் யூதாவின் பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் பட்டினியாய் விட்டு விட்டனர்? இவ்விரு சூழ்நிலைகளுமே நிலவியதாகக் காணப்படுகிறது, ஆனால் வசனம் 10, பரிவிரக்கம் என்பது உயிர்பிழைக்க வழியை விட்டது என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. வேறு வகையில் பார்க்கும்போது பரிவிரக்கம் உள்ளவர்கள் என்று கருதப்பட்ட பெண்கள் உயிர்பிழைப்பதற்காகத் தங்கள் சொந்தக் குழந்தைகளைச் சமைத்து உண்டனர். துன்பங்கள் என்பவை மக்களின் உண்மையான இயல்பை வெளிக்கொண்டு வருகின்றன.*

*பிள்ளைகள் ஏற்கனவே பட்டினியால் இறந்துபோயிருக்கலாம் அல்லது எவ்வாறேனும் பட்டினிகிடக்கத்தான் போகின்றனர் என்று நாம் வாதம்செய்யக் கூடும். பச்சிளம் குழந்தையின் நாவு அதன் மேல் வாயில் ஒட்டிக்கொள்ளும் அளவுக்கு அவர்களின் வாய்கள் உணவு மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறையினால் உலர்ந்து போயின (வச. 4). இருப்பினும், வச.3ல், தாய்மார்கள் வனாந்தரத்தில் இருந்த தீக்குருவியைப் போல் கொடூரமானவர்களாய் இருந்ததாகப் பேசப்படுகின்றனர். சிறுபிள்ளைகள் அப்பத்திற்காக கெஞ்சின, ஆனால் ஒருவரும் அதை அவர்களுக்கு ஊட்டவில்லை.*

*தீக்குருவி (நெருப்புக் கோழி) என்பது சவக்கடலின் கீழ்முனையில் உள்ள அரபு தேசத்தின் பாலைவனங்களில் வாழ்ந்தது (வாழ்கிறது). அது தனது முட்டைகள் வெதுவெதுப்பான மணலில் அடைகாக்கப்படும்படி விட்டுச் சென்றது (செல்லுகிறது). பொதுவான ஒரு கூட்டில் பல பெண் பறவைகள் தங்கள் முட்டைகள் இட்டுச் சென்றன (செல்லுகின்றன). ஒரே வேளையில் ஒன்றுக்கு மேற்பட்ட பறவைகள் ஒரு கூட்டைப் பயன்படுத்த விரும்புகின்றபோது, முதலில் அங்கு வந்து சேர்ந்த பறவையானது அந்தக் கூட்டில் முட்டையை இடும், மற்றவை அருகில் உள்ள மணற்பரப்பில் தங்கள் முட்டைகளை இடும். இரண்டு அல்லது மூன்று டஜன் முட்டைகள் உள்ள பொதுவான கூட்டில், தாய்ப்பறவை தனது முட்டைகள் எவை என்று அறிதல் இயலாததாயிருக்கும். ஆகையால் அது தனது முட்டைகளை இட்டு அவற்றை விட்டுச்சென்றுவிடும். ஆண் பறவையானது முட்டைகளையும் இளம் குஞ்சுகளையும் பார்த்துக்கொள்ளும். இது தாய்க்குருவி தனது இளம் குஞ்சுகளைக் குறித்து அக்கறையாய் இருப்பதில்லை என்ற பிரபலமான விபரத்தைக் குறிக்கிறது.[1] எருசலேமின் தாய்மார்கள், இடர்ப்பாடு மிகுந்த இந்தச் சூழ்நிலையில் தீக்குருவிகளுடன் ஒப்பிடப்பட்டனர்.*

*மக்களுக்குத் தங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்க ரீதியான வளர்ச்சியைக் காட்டிலும் பொருளுடமைகள் அதிகம் மதிப்பு வாய்ந்ததாகிப்போன பணவீக்கமும் செயற்கையான பொருளாதாரமும்*

உள்ள சமூகத்தில் தங்கள் சமூக நிலையைப் பராமரிக்கும்படி வளைந்து நின்ற மக்களைக் கொண்ட ஒரு சமூகமானது மேற்கூறப்பட்ட அந்தக் காட்சியில் இருந்து அதிகம் மாறுபட்டதாயிராத வகையில் இருந்தது. அவர்களின் பொருளாதாரச் செல்வம் அல்லது தனிப்பட்ட விருப்பத்தின் நிறைவேற்றம் என்ற பலிபீடத்தில் அவர்களின் பிள்ளைகள் பலியிடப்பட்டனர். சுயநலமுள்ள பெற்றோர்கள் தங்கள் சுயவிருப்பத்தை நாடுகின்ற போது பிள்ளைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் தெருக்களில் அலைந்துதிரியும்படியோ அல்லது இல்லத்தில் தனியே இருக்கும்படியோ விட்டுவிடப்படுகின்றனர். அவர்கள் தங்கள் வயதை ஒத்த நண்பர்களிடம் இருந்து, மக்கள் தொடர்புச் சாதனங்களில் இருந்து அல்லது பொதுக்கல்வி முறையில் இருந்து தங்கள் மதிப்பீடுகளைக் கற்றுக் கொள்ளுகின்றனர். தேவனுடைய மதிப்பீட்டு முறையைக் கற்றுக்கொள்ள வாய்ப்பற்ற நிலையில், அவர்கள் எது நல்லது அல்லது மோசமானது, எது சரியானது அல்லது தவறானது என்பதை தாங்களாகவே முடிவு செய்தாக வேண்டும். ஒழுக்கத்தின் எந்த ஒரு முழுமையான தராதரத்தையும் வீணாக்குகின்ற ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய பெருங்குழப்பம் என்பதே இதன் விளைவாக உள்ளது.

## செல்வந்தர் வறியவராகின்றார் (4:5)

மிகச்சிறந்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட, நேர்த்தியான வகையில் உடுத்துவிக்கப்பட்ட, ஒருகாலத்தில் மிகச் சிறந்த உணர்வை மகிழ்வுடன் அனுபவித்த பிள்ளைகள் தெருக்களில் விடப்பட்டனர் (வச. 5) ஒருகாலத்தில் அவர்கள் தங்கள் எஞ்சிய உணவுத் துணுக்குகளை வீசியெறிந்திருந்த சாம்பற்குழிகள் (குப்பைத் தொட்டிகள்) அவர்களின் உணவு மேசைகள் ஆயின.

இரத்தாம்பரம்[2] உடுத்துவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டிருந்த இந்த செல்வந்தர்களான யூத நாட்டினர், பிச்சைக்காரர்களாகத் தாழ்த்தப் பட்டனர். அவர்களின் இரத்தாம்பரங்கள் அவர்களுக்கு மதிப்பற்றவை களாயின.ஒருவேளை, தாங்கள் விரும்பிய எதையும் வாங்கப் பழக்கப் பட்டிருந்தவர்கள் தங்கள் பணத்தைக் கொண்டு எதையும் வாங்க இயலாத அளவுக்கு அதிகமாய்த் துன்புற்றனர். பணம் என்பது பாதுகாப்பின் பொய்யான உணர்வை உண்டாக்குகிறது. செல்வம் என்பது சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றி வஞ்சனையான வாக்குறுதிகளை ஏற்படுத்துகின்ற காரணத்தினால் விரும்பத்தக்கதாகக் காணப்படுகிறது. நமக்குத் தேவை யானவற்றை நாம் தவறான இடங்களில் கண்ணோக்குகின்றோம். இது, முறிந்துபோய், உள்ளங்கையில் பட்டுருவிப்போகும் கோலின்மீது சாய்ந்து கொள்ளுதல் போன்றதாக உள்ளது (ஏசா. 36:6). நாம் அதிகமாய் விரும்பு கின்ற சமாதானத்தையும் பாதுகாப்பையும் தேவன் ஒருவரே அளிக்க முடியும் என்று நாம் உணர்ந்தறிய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.

## *விளைவுகள் தாமதிக்கின்றன (4:6, 9)*

*எருசலேம் மற்றும் யூதா ஆகியோரின் அக்கிரமத்தை எரேமியா சோதோமின் அக்கிரமத்துடன் ஒப்பிட்டார் (வச. 6). அவர்களின் பாவங்கள் சோதோம் மற்றும் கொமோரா ஆகியவற்றின் பாவங்களைவிடப் பெரியதாகவும் இருந்தன என்று அவர் முடிவு செய்தார். அந்த நகரங்கள் எச்சரிக்கை எதுவும் இன்றி உடனடியாகத் தூக்கி எறிந்து விடப்பட்டிருந்தபடியால், அவற்றின் குடிகள் தங்கள் பெருந்துன்பம் பற்றிப் பெருவருத்தத்தில் தங்கள் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. யூதாவின் அழிவோ அதைவிடப் பெரியதாய் இருந்தது, ஏனெனில் அந்த அழிவு பல நாட்களாக, வாரங்களாக, மாதங்களாகத் தாமதித்துக் கொண்டிருந்தது. பட்டினி மற்றும் தண்ணீர் இல்லாத நிலை ஆகியவற்றினால் மக்களில் சிலர் தாமதமாக இறந்தனர். பட்டயத்தினால் ஏற்படும் விரைவான மரணமானது பட்டினியினால் ஏற்படும் தாமதமான மரணத்தைவிடச் சிறந்ததாக உள்ளது (வச. 9). இருப்பினும், சோதோம் நகரில் தேவனை அவர்கள் எவ்வாறு வருத்தப்படுத்தியிருந்தனர் என்பதைக் கற்றுக்கொள்வதற்கு எவரொருவரும் உயிர்ப்பிழைத்திருக்கவில்லை. எருசலேமில் வரத் தாமதித்துக் கொண்டிருந்த பெருந்துன்பங்களின்போது பிழைத்திருந்தவர்கள், குறைந்தபட்சம் தாங்கள் எவ்வாறு தேவனிடத்தில் திரும்ப முடியும் என்பதற்கான மதிப்புமிக்க பாடங்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.*

*நமது பசியானது விரும்புகின்ற எல்லாவற்றினாலும் நம்மையே நாம் சீராட்டிக் கொள்வதற்காகத் தேவன் நம்மைப் படைக்கவில்லை. நாம் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கின்றோம்; நாம் அவரது இயல்பின் விரிவாக்கமாக இருக்கின்றோம். நாம் அவருடன் நடந்து, அவரை அறிந்து, அவரைப்போல் இன்னும் அதிகமாய் ஆக வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். அவர் நமக்குள் தமது பிரசன்னத்தின் மூலமாக நம்மை நிறைவடையச் செய்யும்படி நம்மை ஏற்படுத்தியுள்ளார். நாம் அவரை மறந்து தூரமாய் விலகிச் செல்லும்போது, திரும்பி வரும் வழியானது கரடுமுரடானதாக, கடினமானதாக இருக்கும் - ஆனால் தேவனிடத்தில் திரும்பி வரக் குறைந்தபட்சம் ஒரு வழி உள்ளது. தாமதமான, தவறான வாழ்வினால் ஏற்பட்ட வேதனை நிறைந்த பின் விளைவுகள் நாம் தேவனிடத்தில் திரும்பி வர உதவக்கூடும். தேவன் தமது வசனத்தில் போதிக்கின்ற அவரது பாடங்களைக் கவனியுங்கள். யூதாவினால் எதிர்கொள்ளப்பட்ட தாமதமான விளைவுகளின் மூலம் அவர் நமக்குக் கூறுவது என்ன?*

## *மேன்மையானது அடையாளம் காணக் கூடாததாக ஆயிற்று (4:7, 8)*

*கௌரவத்தை மதிக்கின்றவர்களுக்கு, பெயர் மற்றும் முகத்தை அடையாளம் கண்டுகொள்ளுதல் என்பது முக்கியமானதாக உள்ளது.*

பிரபுக்கள், ஆசாரியர்கள் மற்றும் பிற அதிகாரிகள் தேவனுடைய மக்களுக்கு அவரது பிரதிநிதிகளாக இருந்தனர். அவர்கள் அவர் சார்பாக மக்களுக்கு ஊழியம் செய்யும்படி பரிசுத்தப்படுத்தப் பட்டிருந்தனர். அவர்கள் தங்கள் பதவிகளுக்குப் பொருத்தமானது என்று தாங்கள் நினைத்திருந்த தோற்றங் களை நன்கு காத்துக்கொள்வதற்காகத் தங்களை நன்கு பேணிக் கொண்டிருந்தனர். அவர்கள் உறைந்த மழையைப் பார்க்கிலும் சுத்தமாகவும் அல்லது பாலைப் பார்க்கிலும் வெண்மையாகவும் இருந்தனர் (வச. 7). அவர்கள் ஆரோக்கியத்தின் சித்தரிப்புகளாக, பவளம் போன்ற சிவந்த கன்னங்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் இந்திரநீலத்தைப் போன்று பிரகாசிக்க மெருகேற்றப் பட்டிருந்தனர். அவர்கள் எளிதில் காணப்படக் கூடியவர்களாக, சமூகத்தில் ஒவ்வொருவராலும் அடையாளம் காணக்கூடியவர்களாக இருந்தனர்.

வசனம் 8ல் அவர்களைக் காணுங்கள். அவர்களின் தோலானது கரியைப் போலக் கறுத்திருக்கும் அளவுக்கு அவர்கள் மிகவும் அழுக்காய் இருந்தனர். அவர்கள் குடிக்கப் போதுமான தண்ணீர் கொண்டிருக்கவில்லை. குளிப்பதற்குத் தண்ணீரைப் பயன்படுத்தும் அளவுக்கு எவருக்கும் துணிவு இல்லை. அவர்களின் தோலானது மிகவும் உலர்ந்து, சுருக்கம் விழுந்து, பசியாலும் பறிகொடுத்தலினாலும் கடினமாயிற்று, ஒருகாலத்தில் தெருவில் அவர்களை நன்கு அறிந்திருந்தவர்களால் கூட இப்போது அடையாளம் காணமுடியவில்லை. பேணுதல்/தலைவாருதல் என்பது இனியும் முக்கியமற்றதாகிப் போயிருந்தது. வெளித்தோற்றமானது இனியும் பிரபலமானவர்களை வறியவர்களில் இருந்து பிரித்து காண்பிக்கவில்லை. பெருந்துன்பமானது எல்லா மக்களையும் சமமானவர்களாக்கிற்று.

## நம்ப இயலாதது உண்மைநிலையாகிறது (4:11, 12)

விரோதியொருவன் எப்படி எருசலேமுக்குள் நுழைந்து அதன் மக்களைச் சிறைப்பிடிக்க முடியும்? இது தேவனுடைய நாமத்தை மேன்மைப்படுத்தும் அவருடைய நகராகவே இருந்ததே! அவருடைய கரம் இந்த நகரின்மீது இருந்ததே. எருசலேம் முழுவதிலும் அவருடைய பிரசன்னம் இருந்தது, அதன் நடுவில் அவரது தேவாலயம் இருந்தது. பூமியின் அரசர்களும் குடிகளும் அதை நம்பியிருக்க மாட்டார்கள்; இருப்பினும் ஒருகாலத்தில் யெகோவாவின் வல்லமைநிறைந்த, மரியாதைக்குரிய, வளர்ந்து செழித்த கோட்டையானது அதன் அஸ்திபாரங்கள் முதலாய்ப் பட்சிக்கப்பட்டதாயிற்று (வசனங்கள் 11, 12).

யெகோவாவைவிட இன்னொரு தேவன் அதிக வல்லமையுள்ளவனாய் இருந்தான் என்பதாலோ அல்லது யூதா நாட்டைவிட இன்னொரு நாடு மிகவும் சிறந்ததாக இருந்தது என்பதாலோ இந்த அழிவு வந்திருந்ததில்லை. நகரத்தை அலங்கரித்திருந்த பிரசன்னத்தைக் கொண்டிருந்த அதே தேவன், தமது மக்களின் உண்மையற்ற தன்மையைச் சகிக்கக்கூடாது போனபடியால் எருசலேம் மீது பெருந்துன்பம் கவிந்திருந்தது. அவரது கடுங்கோபம்

சீயோனில் நெருப்பைத் தூண்டிவிட்டது. அவரது கோபம் முழுமை அடைந்தது.

## செய்தி என்ன?

தேவன் எப்போதும் சலுகை காண்பிப்பார் என்று நினைத்து விடாதீர்கள்! நீங்கள் விரும்பியதை எல்லாம் செய்துகொண்டு, இன்னமும் அவரால் ஆசீர்வதிக்கப்பட முடியும் என்று நினைக்காதீர்கள். வளமையின் பளபளப்பினாலும் சந்தோஷத்தின் பிரகாசமான வெளிச்சத்தினாலும் திரும்புவதற்கு நமது தலையை நாம் அனுமதிக்கும்போது, நாம் சுய அழிவுப்பாதை ஒன்றைத் தேர்ந்து கொள்கின்றோம். பொருளாதார வளமானது, பண்பு அல்லது ஒழுக்கநெறிகள் என்பவற்றைவிட முக்கியமானது என்று நாம் நினைக்கும்போது, நாம் ஏமாற்றமடையச் செல்பவர்களாய் நியமிக்கப்படுகின்றோம்.

இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் இந்த உலகமானது நமக்குள் நுழைய அனுமதிக்காது இருத்தல் என்பதே கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் எதிர்கொள்ளுகிற மிகக் கடினமான அறைகூவலாக உள்ளது. கலாச்சார மானது சுவிசேஷத்துடன் மோதுகிறதாக இருக்கிறது. சபையானது எஞ்சியுள்ள உலகத்தில் இருந்து தனித்து நிற்கவேண்டிய துணைக் கலாச் சாரமாக உள்ளது. நம்மைச் சுற்றியுள்ளவர்களில் இருந்து வித்தியாசமாகச் செயல்படுபவர்களாய்க் காணப்படாதபடிக்கு நாம் காட்சியில் ஒன்றுகலக்கும்போது, நாம் கலாச்சாரத்தினால் கவர்ந்திழுக்கப்பட்டு அடிபணிந்து போகின்றவர்கள் ஆகின்றோம். பண்பு என்பது உலகத்தைக் காட்டிலும் சபைக்கு இனியும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்றானால், பலத்திற்கான நமது கடைசிக் கோட்டை தகர்ந்து வீழ்ந்து போயுள்ளது என்றாகிறது. கிறிஸ்தவர்கள், எஞ்சியுள்ள உலகத்தின் மதிப்பீட்டு முறைமைகளைத் தழுவிக்கொண்டிருந்தால், தேவனுடைய முற்றான சத்தியங்களை உயர்த்திப் பிடிப்பதற்கு எவரும் இருக்கமாட்டார் கள்.

இந்த உலகத்தை ஒரு பெரிய கருப்பு வட்டமாகச் சித்தரித்துக் கொள்ளுங்கள். பின்பு, சபையை அந்தக் கருப்பு வட்டத்தின் மையத்தில் உள்ள ஒரு வெள்ளை வட்டமாகச் சித்தரித்துக் கொள்ளுங்கள். (பெரிய கருப்பு வட்டமான) உலகத்துடன் தொடர்புள்ள வகையில் (சிறிய வெள்ளை வட்டமான) சபையின் நோக்கம் என்னவாக உள்ளது? அந்த வெள்ளை வட்டம் விரிவடைய வேண்டுமா, சுருங்க வேண்டுமா? அல்லது அதே நிலையில் இருக்க வேண்டுமா?

நாம் வேறுபட்டவர்களாய் இருக்க வேண்டும், ஆனால் அது வேறுபட்டிருக்க வேண்டும் என்பதற்காக மாத்திரம் என்பதாக இருக்கக் கூடாது. நாம் தனிமைப்பட்டவர்களாக இருக்கவும் கூடாது; ஆனால் நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு ஒரு தாழ்மையான, தீர்மானமான முயற்சியை மேற்கொள்பவர்களாக, மற்றும் அதைக் குறித்து வெட்கம்

*அடையாதவர்களாக, மக்களின் அலைந்து திரியும் தன்மையை நேசிக்காமல் அவர்கள்மீது அன்புகூருபவர்களாக, நீதிக்காக எழுந்து நிற்பவர்களாக இருக்க வேண்டும் (நீதி. 23:23; மத். 6:19-21).*

---

*குறிப்புகள்*

[1]Gene Stratton-Porter, "Ostrich," *International Standard Bible Encyclopedia,* vol. 4, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 2204.

[2]*"இரத்தாம்பரம்" என்பது இராஜரீகத்தின் உடையாக இருந்தது. பெனிக்கே நாட்டில் இருந்தவர்கள், ஒரு வகையான மீனிலிருந்து சுரக்கும் பால்போன்ற திரவத்தை (இதன்மீது காற்றுப்படும்போது, இது சிவப்பாக மாறுகிறது) சாயமாக்கும் முறைமை ஒன்றைச் செம்மைப்படுத்தியிருந்தனர். இரத்தாம்பரத் துணியானது ஆசாரிப்புக் கூடாரத்தையும் (யாத். 25:4), சாலொமோனின் தேவாலயத்தையும் (2 நாளா. 2:14; 3:14) அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்டது.* (Alfred Ely Day, "Purple" *International Standard Bible Encyclopedia,* vol. 4, ed. James Orr [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957], 2509).